# புதிய பூமி

පුදිය පුමි

Puthiya Poomi REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

சுற்று 08 நவம்பர்/டிசம்பர் 2001 பக்கம் 04 விலை 10/= சுழற்சி 43


# பேரினவாத கட்சிகளை எதிர்ப்போம் தமிழ்க் கூட்டாளிகளை நிராகரிப்போம்.

ஐ.தே.கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய இரண்டில் எது நல்லது என்று தேர்ந்தெடுக்க முடியாத நிலையிலேயே இலங்கை மக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்க விருக்கின்றனர். அவ்விரண்டு கட்சிகளும் இந்நாட்டின் பெரும்பான்மை தமிழ், முஸ்லீம் மலையகத் தமிழ் மக்களையும் மிகவும் மோசமாக அடக்கியும், சுரண்டியும் அவற்றின் ஆட்சி அதிகாரத்தை மாறி மாறி நிலைநாட்டி வந்துள்ளன அவை இரண்டையுமே தோற்கடிக்க வேண்டும் அத்துடன் அவற்றுடன் ஒட்டி உறவாடி பிழைப்பு நடத்தும் தமிழ்கட்சிளையும், மலையகத் தொழிற்சங்கத் தலைவர் களையும் நிராகரிக்க வேண்டும் இதுவே எதிர்வரும் பொதுத்தேர்தலில் இலங்கை மக்கள் அனைவருக்கும் இருக்கின்ற சரியான தெரிவாகும்.

தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை ஐ.தே.கட்சியும், பொதுஜனஐக்கிய முன்னணியின் தொடர்ந்து தலைமை கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தொடர்ந்து மறுத்துவருகின்றன. தமிழ் மக்கள் மீது இனவன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளன. அரசியல் கைதிகளை சிறைக்குள்ளே கொலை செய்துள்ளன தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதத்தையும், யுத்தத்தையும் ஐ.தே.க. தொடக்கியது. அவற்றை பொதுஜனஐக்கிய முன்னணி தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. ஜனநாயக வழியில் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, இனசமத்துவம் என்பவற்றை உறுதிசெய்வதற்கு இரண்டு கட்சிகளும் தயாராக இல்லை. முஸ்லீம் மக்கள் மீதும் மலையத்தமிழ் மக்கள் மீதும் தொடர்ந்து இனரீதியான ஒடுக்கலை முன்னெடுத்து வருகின்றன.

ஏகாதிபத்திய சார்புடைய, முதலாளித்துவ பௌத்த சிங்கள பேரினவாத அரசு யந்திரத்தை இரண்டு கட்சிகளுமே கட்டியெழுப்பியுள்ளன. இதனால் தேசிய இனங்களிடையே ஐக்கியம் குலைந்துள்ளது மட்டுமின்றி நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

எனவே ஐ.தே.கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி என்பன மக்களின் ஆணையை பெற்றுக்கொள்ள தகுதியற்றன. அவை மக்களால் நிராகரிக்கப்பட வேண்டியனவாகும்.

தற்போது மிகவும் பரப்பரப்பாக பேசப்பட்டு வருகின்ற தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு என்பது பேரினவாத ஐ.தே.கட்சியின் தமிழ் கூட்டாளிகளின் அமைப்பாகும். அக்கூட்டமைப்பு ஜனநாயக பூர்வமான கலந்துரையாடல் களின் பின்னர் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்காக அமைக்கப்படவில்லை. தமிழ் மக்களின் போராட்டத்தை இந்திய மேலாதிக்க வாதிகளுக்கும், இலங்கையின் இரண்டுபேரினவாத அரசாங்கங் களுக்கும் காட்டிக் கொடுத்த வரலாறு டைய தமிழ் கட்சித்தலைவர்கள் எதிர்வரும் பாராளுமன்றத்தில் பதவிகளை திட்டமிட்டவகையில் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு, அவர்களின் கூட்டா ளியான ஐ.தே.கட்சியின் ஆதிக்கத்தை பாராளுமன்றத்தினுள் நிலைநாட்டுவதற்காக அவசர அவசரமாக கூட்டமைப்பை அறிவித்தனர். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் பல்வேறுவகையில் பங்களிப்பையும், ஆதரவையும் வழங்கி வருகின்ற சக்திகள் அனைத்துடனும் கலந்துரையாடாமல், அவற்றையும் இணைத்துக்கொள்ளாமல், அதற்கான பொதுவேலைத்திட்டம் இல்லாமல் நான்கு தமிழ் கட்சிகள் இணைந்துள்ளன.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களுக்குள்ள ஜனநாயக பூர்வமான தெரிவுகளை மறுக்கும் வகையில் தமிழ் கூட்டமைப்பை மட்டுமே தமிழ் மக்கள் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்து பழமைவாத தமிழ் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட தமிழ் கட்சிகளின் தலைவர்கள் முயற்சிகளை எடுத்து வருகின்றனர். பலவிதமான படைகளின் பெயர்களில் அறிக்கைகளை வெளியிட்டு தமிழ்க்கட்சி கூட்டமைப்பிற்கு எதிரான தமிழ் மக்களின் கருத்து தெரிவு சுதந்திரங்களை அடக்க முயற்சிக்கின்றனர். சில படித்த தமிழர்களும் கூட்டமைப்புக்கு சப்பை கட்டுகின்றனர்.

இருக்கின்ற தேர்தல் முறையின் கீழ் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை பலம் கிடைக்கப்போவதில்லை. அத்துடன் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான எந்தவொரு நியாயமான தீர்வு திட்த்திற்கும் ஐ.தே.கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி என்பவற்றிடையே பாராளுமன்றத்திற்குள் இணக்கப் பாட்டை ஏற்படுத்துவது சாத்தியமில்லை. ஐ.தே.க. பொதுஜன ஐக்கிய, ஜே.வி.பி. என்பன அவற்றின் பேரினவாத நின்லப்பாட்டை மாற்றப் போவதில்லை. இந்நிலையில் ஐ.தே.கட்சியின் தமிழ் கூட்டாளிகள் பாராளுமன்றத்துக்குள் சென்று சாதிக்கப்போவதென்ன? பாராளுமன்றத் துக்கு வெளியே இருக்கும் பெரும் எண்ணிக்கையான சிங்கள மக்களை இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல்

தொடர்ச்சி 4ம் பக்கம்



| யாழ் மாவட்டம் | கொழும்பு மாவட்டம் | யாழ் மாவட்டம் | யாழ் மாவட்டம் | நுவரேலியா மாவட்டம் | கொழும்பு மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| 6 | 2 | 12 | 4 | | 6 |

## மலையகத்தின் புதிய தலைமைக்கு வலு சேர்ப்போம்

மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் புதிய ஜனநாயக கட்சி அதன் மத்தியகுழு உறுப்பினரான எஸ். பன்னீர்செல்வம் தலைமையில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மணிக்கூட்டு சின்னத்தில் போட்டியிடுகிறது. மலையகத் தோட்டத் தொழிலாளர்களினதும், சேவையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெண்களினது உரிமைகளுக்காகவும், மலையகத்தமிழ் தேசிய இனத்தின் சுயாட்சிக்காகவும், சுயநிர்ணய உரிமைக்காகவும் புதிய ஜனநாயக கட்சி தொடர்ந்து போராடி வருகிறது.

இரண்டு பேரினவாத கட்சிகளிடமும் மண்டியிட்டுள்ள மலையகத் தொழிற் சங்கங்களுடன் கூட்டமைப்பதற்கோ, உடன்படுவதற்கோ எவ்வித நியாயமும் இருக்க முடியாது. தோட்டத் தொழிலாளர்களின் சந்தாப்பணத்தில் ஜீவித்துக் கொண்டு காலத்திற்கு காலம் நியாயமான போராட்டங்களையும் காட்டிக் கொடுத்துக் கொண்டு மலையகத்தமிழ் மக்களை அடிமையாக வைத்துச் கொண்டு அரசியல் வியாபாரம் செய்து வரும் மலையகத் தொழிற் சங்கங்களை மக்கள் நிராகரித்து ஓரம் கட்டவேண்டும். அதற்காக ஒரு சந்தர்ப்பமாக கிடைத்து உள்ள இப்பொழுத் தேர்தலில் அவர்களுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

பிந்துனுவெவ தடுப்பு முகாம் கொலைகள் நடைபெற்றும் அதற்கு எதிரான தலவாக் கொல்லை போராட்டமும் நடைபெற்று ஒரு வருடமாகிவிட்டது. தலைவர்கள் எனப்படுவோர் மறந்துவிட்டனர்.

அப்போராட்டத்தினை இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் காட்டிக் கொடுத்ததாக ம.ம.மு. தலைவர் சந்திரசேகரம் தெரிவித்தார். பிறகு சம்பள உயர்வுக்கான போராட்டத்தில் எல்லாம் ஒன்றாக ஒரே மேடையில் தோன்றினார்கள். அப்போராட்டமும் காட்டிக் கொடுக்கப்பட்டது.

மக்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள் என நினைத்துக் கொண்டு கூட்டு சேர்ந்துவிட்டதாக ஆறுமுகனும் சந்திரசேகரனும் கூறுகின்றனர். மக்கள் அவ்வளவு சீக்கிரமாக அவர்களின் காட்டிக் கொடுப்புகளை மறந்துவிடமாட்டார்கள்.

மீண்டும் எம்.பி.யாவதற்கும், அமைச்சராவதற்கும் ஆறுமுகனும், சந்திரசேகரனும் கூட்டுச் சேர்வதாகக் கூறிகொண்டு ஐ.தே.கட்சியுடன் கூட்டுச்சேர்ந்துள்ளனர். ஐ.தே.கட்சியில் இருந்த புத்திரசிகாமணி பொதுஜன ஐக்கிய முன்னணியில் சேர்ந்துவிட்டார். அவர் ஐ.தே.கட்சியின் தலைமையை விமர்சிக்கிறார். ஆறுமுகன் சந்திரசேகரன் என்போர் பொதுஜன ஐக்கிய முன்னணியை விமர்சிக்கின்றனர். எது சரி என்பதையே மக்கள் தீர்மானிக்க வேண்டும். ஐ.தே.கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணி இரண்டுமே மக்கள் விரோதமானதே. எனவே ஒரு கட்சி சரியென்றும் மறுகட்சி பிழையென்பது மன்றி இரண்டும் பிழையானதே இரண்டும் நிராகரிக்கப்பட வேண்டியதே.

எனவே அந்த இரண்டு பேரினவாத, முதலாளித்துவ கட்சிகளுக்கு மாறாக நாடளாவிய புதிய தலைமைத்துவத்தையும் மக்கள் விரோத மலையக தொழிற் சங்கத் தலைமைகளுக்கு மாறாக மலையகத்தில் புதிய தலைமைத் துவத்தையும் கட்டி வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள புதிய ஜனநாயக கட்சி தோழர்களுக்கு வாக்களிப்போம்.

## நான்கு தமிழ் கட்சிகளிடம் புதிய ஜனநாயக கட்சியின் நறுக்கான கேள்விகள்?

## பதில் கூறட்டும்

நாட்டில் பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம் தமிழ் மக்கள் மீது தொடரப்படும் இன்றைய சூழலில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்காக மட்டும் பொதுக் கொள்கையோ வேலைத்திட்டமோ இன்றி தமிழ்க்கட்சிகள் நான்கு ஐக்கியப்பட்டிருப்பதாக கூறிக்கொள்வது போலித்தனமானதும் ஏமாற்றுமாகும். இது வடக்கு கிழக்கின் அதிகப்படியான ஆசனங்களைத் தமக்குள் பங்கு போட்டுக் கொள்வதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள ஐக்கியமே தவிர தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஒன்றல்ல. அதற்கு காரணம் வடக்கு கிழக்கு மக்களின் துன்ப துயரங்களிலிருந்து விலகி நின்று கொழும்பு வாழ் மேல்தட்டு வர்க்கத் தமிழ்க் கனவான்களின் விருப்பத்தின் பேரிலேயே இவ் ஐக்கியம் கோர்க்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இவ் ஐக்கிய மானது பேரின வாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி களின் கூட்டுமாகும். எனவே வடக்கு கிழக்கு மலையகத் தமிழ் மக்கள் இக் கட்சிகளின் ஐக்கியம் என்னும்பட்டை நாமத்தால் மீண்டும் ஒரு தடவை ஏமாற் றப்படக் கூடாது என்பதே புதிய ஜன நாயகக் கட்சியின் வேண்டு கோளாகும்.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் நான்கு தமிழ்கட்சிகளின் ஐக்கியம் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. செந்திவேல் மேலும் தனது அறிக்கையில் இவ் நான்கு கட்சிகளின் ஐக்கியம் பற்றி எமது கட்சி கீழ் வரும் கேள்விகளை எழுப்புகின்றது. இவற்றுக்கு தமிழ் கட்சிகள் நேர்மையான பதிலைத் தருவார்களா என்றும் கேட்டுள்ளார்.

நான்கு தமிழ்க்கட்சிகளின் ஐக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்த கொள்கையோ வேலைத்திட்டமோ யாது? தமிழ் மக்களின் அபிலாஷைகளை முன்வைத்து ஐக்கயத்திற்கான பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டிருந்தால் ஏனைய கட்சிகள் ஏன் அழைக்கப்படவில்லை? ஒரு பரந்த ஐக்கிய நோக்கம் இருந்திருப்பின் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காக குரல் கொடுத்துப் போராடி வரும் நேர்மையான இடதுசாரிக் கட்சிகளை ஏன் அழைக்கவில்லை? தமிழ் மக்களின் அரசியல் ஆதிக்கம் உங்கள் கைகளில் மட்டும் தான் இருக்க வேண்டுமென்று பாரம்பரிய பழமைவாத நிலைப்பாடுதான் காரணமா? சரி ஐக்கியம் என்று கூறுகின்றீர்களே ஏன் ஒரு பொதுச் சின்னத்தை தெரிவு செய்து அதன் கீழ் சகலரையும் ஐக்கியப்படுத்தி போட்டியில் நிற்க முடியவில்லை? தேர்தல் முடிந்த பின்பு இரண்டு ஆளும் வர்க்க பேரினவாத கட்சிகளுக்கும் குறிப்பாக நீங்கள் தற்போது விசுவாசித்து நிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எத்தகைய மறைமுக, நேரடி ஆதரவைத் தெரிவிக்க மாட்டோமென்று தமிழ் மக்களுக்கு சத்திய உத்தரவாதத்தை எழுத்து ஆவணமாகக் கொடுக்கத் தயாரா? எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கும் உங்களுக்கும் மறை முகமான எழுதா உடன்பாடு இருப்ப தாகக் கூறப்படும் கூற்றை நேர்மையுடன் நெஞ்சில் கை வைத்து மறுப்பீர்களா? யாவற்றுக்கும் மேலாக தமிழ்த் தேசிய இனத்தின் இன்றைய அவலவாழ்வுக்கும் கடந்த கால நூற்றாண்டு காலத்தில் உங்களது அரசியல் போராட்டத் தவறு களால் ஏற்பட்ட அழிவுகள் அனைத்தி ற்கும் சுய விமர்சனம் முன்வைத்து மன்னிப்புக் கேட்டு புதிய அரசியல் மார்க்க த்திற்கு உத்தரவாதம் வழங்குவீர்களா?

எனவே தான் புதிய ஜனநாயக கட்சி இலங்கையின் இரண்டு பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகளின் பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்து அவற்றின் அரசியல் தீர்வை மறுக்கும் நிலைப்பாட்டை எதிர்த்து, சுயநிர்ணய உரிமைக்கான வெகுஜன போராட்ட மார்க்கத்தை வலியுறுத்தி இத்தேர்தலில் வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் மணிக் கூட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. ஆதலால் தமிழ் மக்கள் அரசியல் தூர நோக்குடன் இத்தேர்தலில் வாக்களிக் வேண்டும் எனப் புதிய ஜனநாயக கட்சி கோருகின்றது.

# புதிய ஜனநாயக கட்சி தேர்தலில் ஏன் போட்டியிடுகின்றது?

## பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் போராட்ட சக்தியாக நிற்பதே அதன் இலக்கு

புதிய ஜனநாயக கட்சி ஏன் தேர்தலில் போட்டியிடுகிறது என்னும் கேள்வி இன்றும் சிலரால் கிளயப்படுகின்றது. அவ்வாறு கேள்வி எழுப்பப்படுவதற்கு நியாயங்கள் இருக்கவே செய்கின்றது.

புதிய ஜனநாயக கட்சி ஒரு மாக்சிச லெனினிசக் கட்சியாகும். அதன் தத்துவார்த்த அடிப்படை மாக்சிசம் லெனினசம் மா ஓ சேதுங் சிந்தனை யாகும். அத்துடன் 1964ல் இலங்கையின் பொதுவுடமைக் கட்சியின் திரிபுவாத மார்க்கத்தையும் பாராளுமன்ற சந்தர்ப்ப வாதச் சேற்றில் மூழ்கும் போக்கையும் நிராகரித்த புரட்சிகர கட்சியான தோழர் சண்முகதாசன் தலைமையில் அணி திரண்டவர்களின் தொடர்ச்சி தான் புதிய ஜனநாயக கட்சியாகும்.


அவ்வாறு புரட்சிகரப்பாதையில் வழிநடந்து பல வரலாற்று புகழ் மிக்க வெகுஜனப் போராட்டங்களை வடக்கு கிழக்கில் மலையகத்தில், கொழும்பில் நடாத்தி உயிர்த்தியாகங்களும் போராட்டத் தழும்புகளும் பெற்ற பொதுவுடமை பாரம்பரியத்தில் இருந்து தான் புதிய ஜனநாயக கட்சி தனது அரசியல் மார்க்கத்தை முன்னெடுத்துவந்துள்ளது. அதன் பாதையில் தொடர்கிறது.

1970ம் பொதுத் தேர்தலை அன்றைய தேசியசர்வதேசியச் சூழல் காரணமாக தோழர் சண்முகதாசன் தலைமையில் நிராகரித்து பங்குகொள்ளாது பகிஷ்கரித்துக் கொண்டது. அவ்வாறே பின் வந்த தேர்தல்களையும் பகிஷ்கரித்துக் கொண்டது. அவ்வாறு செய்ததில் சாதகபாதக அம்சங்கள் இருந்தன. ஆனால் 1978ல் புதிய ஜனநாயக கட்சி (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)) எனத்தோற்றம் பெற்ற பின்பு முன்னைய அரசியல் நிலைப்பாடு களை விமர்சனம் சுயவிமர்சனத்திற்கு உட்படுத்திக் கொண்டது. அடிப்படையான தத்துவார்த்த அரசியல் மார்க்கத்தை உறுதியாகப் பற்றி நின்று தேசிய இனப்பிரச்சினை, ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம், வெகுஜனப் போராட்ட மார்க்கம் போன்றவற்றில் தேசிய சர்வதேச நிலைமைகளின் அடிப்படையில் உரிய மாற்றங்களைச் செய்து கொண்டது. குறிப்பாக இவை ஒரே நாளில் தீர்மானிக்கப்பட்ட ஒன்றல்ல கட்சியின் 1வது 2வது 3வது காங்கிரசுகளின் ஊடாகவும் நடைமுறை வேலை முறைகளினுடாகவும் பெறப் பட்ட அனுபவ முடிவுகளாக அமைந்தது.

அந்த அடிப்படையில் முதலாளித்துவப் பாராளுமன்ற தேர்தல்களையும் உள்ளூராட்சித் தேர்தல்களையும் கட்சி எதிர்நோக்கும் முடிவு மேற்கொள்ளப் பட்டது. நுவரேலியா மாவட்டத்தில் ஏற்கனவே பாராளுமன்ற மாகாண சபைத் தேர்தல்களில் நான்கு தடவைகள் பங்கு கொண்டு அவற்றுக்கு ஊடான அனுபவங்களையும் படிப்பினைகளையும் பெற்றுக்கொண்டதுடன் மக்கள் மத்தியிலான வேலை முறைகளுக்கும் அடிப்படைகளை தேடிக்கொண்டது.

அதேவேளை வடக்கில் நிலவிய விஷேட நிலைமை காரணமாக முன்னைய தேர்தல்களில் பங்கு கொள்ள வில்லை. ஆனால் கடந்த தேர்தலில் தான் முதல் தடவையாக கட்சி வடக்கில் போட்டியிட்ட துடன் கணிசமான வாக்குகளையும் பெற்றுக்கொண்டது. குறைந்த வளங்களுடனும் உறுதியான அரசியல் கோரிக்கைகளுடனும் கட்சி அத் தேர்தலில் களமிறங்கி மக்கள் மத்தியில் எமது கொள்கைகளை முன்னெடுத்துச் சென்றது. இத் தேர்தல் அனுபவம் வெறும் வாக்குச் சேகரிக்கும் ஒன்று மட்டுமல்ல. மக்கள் மத்தியிலான தொடர்பும் அவர்களது கருத்து நிலை என்பனவற்றை அறிந்து புரிந்து கொள்வதுமாகும்.

நாம் தேர்தலில் பங்கு கொள்ளும் போது வெறும் வெற்றிக்காக சந்தர்ப்பவாத மாகவோ அல்லது சீரழிந்த பாதையிலோ செல்ல முடியாது. நமது கொள்கை களையும் மக்களது விமோசனத்திற்கான மார்க்கத்தையும் முன்வைத்தே தேர்தலில் நிற்கின்றோம்.



பொதுச் செயலாளர்
**சி. கா. செந்திவேல்**

இன்றைய பாட்டாளி வர்க்க சர்வதேசிய நிலை மிகவும் பலவீனமாகவே காணப் படுகிறது. அவ்வாறே பொதுவுடமை - இடதுசாரி இயக்க நிலைமைகளும் பின்தங்கியதாகவே உள்ளது. உலகமயமாதல் என்பதாலும் சோவியத் சரிவின் பின்னான சர்வதேச மாக்சிச சோஷலிசப் பின்னடைவாலும் மக்கள் மத்தியில் சோர்வு காணப்படுவது யதார்த்தமாகவே உள்ளது.

இந்நிலையில் மக்கள் மத்திக்கு செல்லவும் மக்களுக்கு தேர்தல் களத்தில் நின்று எமது கருத்துக்களைக் கூறவும் ஒரு சந்தர்ப்பமாகின்றது. அத்துடன் பாராளுமன்றத்தில் ஒன்று இரண்டு பிரதிநிதிகள் கிடைப்பதன் மூலம் அதனைச் சரியானபடி பயன்படுத்தி என்றும் போராட்டக் குரலை உள்ளேயும் வெளியேயும் முன்னெடுத்து மக்களது வெகுஜன எதிர்பலையை முன் தள்ள வேண்டும்.

நாட்டின் இன்றைய பேரினவாத யுத்த சூழலில் நடைபெறும் தேர்தல் பலவகையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளும் நாட்டிற்கு தலைமை தாங்கும் ஆற்றலை இழந்து விட்டன. ஆனால் அவைதான் நிலவுடமை முதலாளித்துவ நிலை நின்று தமது பணம், பதவி சாதி அந்தஸ்து, வர்க்க நிலைபோன்றவற்றின் மூலம் பொய் வாக்குறுதி கொடுத்து ஆட்சி அமைக்கும் நிலை நீடிக்கின்றது.

இத்தகைய இரு கட்சிகளும் மாறி மாறி வரும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதுவே மூன்றாவது சக்தி ஒன்றினைக் கட்டி எழுப்ப வேண்டிய, வரலாற்று தேவையை இடதுசாரி ஜனநாயக சக்திகள் முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதற்கு இத்தேர்தல் களத்தை நன்கு பயன்படுத்தி நமது வேலைமுறைகளை விஸ்தரித்து ஸ்திரப்படுத்தல் வேண்டும்.

எதிர்வரும் தேர்தல் யுத்தகளத்தில் நடைபெறும் மற்றொரு தேர்தல் யுத்த மாகும். இதனை எதிர்கொள்வது நமது கட்சிக்கு ஒரு வரலாற்றுக் கடமையாகும். பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்குள் வீழ்ந்து கொள்ளாது நமது கொள்கைகள் இலட்சியங்களை மக்கள் மத்திக்கு எடுத்துச்சொல்லுவோம். ஏற்பதும் ஏற்காது விடுவதும் அவர்களது பொறுப்பு ஏன் தேர்தல் களத்தில் இதனை முன்வைக்க வில்லை என்ற குற்றச் சாட்டிற்கு எமது கட்சி ஆளாகாது. இத்தேர்தலில் நமது வலிமையான கொள்கை இலச்சியத்தோடு இறங்கு கின்றது.

அதற்காக ஆகக் குறைந்தளவு இணக் கப்பாட்டிற்கு வரக் கூடிய சக்தியாக இருந்த ஜனநாயக இடதுசாரி முன்னணியுடன் இணைந்து மணிக் கூட்டுச் சின்னத்தில் புதிய ஜனநாயக கட்சி போட்டியிடுகின்றது. எமக்கு கிடைக்கக் கூடிய ஒவ்வொரு வாக்கும் எமது கட்சியின் நிலைப்பாட்டிற்கு வழங் கப்படும் அங்கீகாரமாகவே கொள்வோம்.

யாழ்ப்பாணம், நுவரேலியா, கொழும்பு மாவட்டங்களில் நமது கட்சி ஜனநாயக முன்னணியுடன் இணைந்து போட்டியிடு கின்றது. கட்சியின் தலைவர்களும் உறுப் பினர்கள் ஊழியர்கள் மற்றும் நண்பர்கள் வேட்பாளர்களாக நிற்கின்றனர்.

வெற்றி பெறும் பட்சத்தில் பாராளு மன்றத்தில் புதிய ஜனநாயகக் கட்சி தனது தனித்துவம் பேணி ஒரு சக்தி மிக்கப் போராட்டக் குரலாகவும் எதிர்ப்பு சக்தி யாகவும் நின்று போராடும். அத்துடன் வெளியே வெகுஜனப் போராட்ட அலை கிளப்பி இரண்டு பேரின வாத ஆளும் வர்க்க கட்சிகளுக்கும் எதிரான ஒரு மூன்றாவது சக்தியைத் தோற்றுவித்து இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் முன் செல்ல அர்ப்பணிப்புடன் செயல்படும் என்பதே புதிய ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாடாகும்.

• • • • • • • •

# தமிழ்க் கட்சிகளின் போலித்தனமும் ஐக்கியம் என்ற கேலிக்கூத்தும்

தமிழ் மக்களை ஒன்றுபடுத்துகிறதாகச் சபதமெடுத்துக்கொண்டு தமிழரசுத் தந்தையார் 1949ம் ஆண்டு தொடங்கிய பயணம் தனயர்களால் தொடரப்பட்டு இன்று தமிழ்க் கட்சிகளை ஒன்று படுத்தும் புண்ணியத் திருப்பணி தமிழ் மக்களது இன்றைய அவலத்துக்கு முக்கியமான காரணமாக இருந்து வந்த யூஎன்.பி.யிடம் போய்ச் சேர்ந்திருக் கிறது.

தமிழ்க் காங்கிரஸ் அரசியல் எப்போதுமே யூஎன்.பியுடன் தொற்றிக் கொள்வதி லேயே தங்கியிருந்து வந்தது. 1987க்குப் பின் குமார் பொன்னம்பலம் யூஎன்.பி யுடன் முரண்பட்ட போது மட்டுமே, ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு தனிப்பட்ட முறையில் அவருடன் ஒரு நெருக்கம் ஏற்பட்டது. அது நிலைக்கவில்லை. ஆனால் தமிழ்க் காங்கிரஸ் பாரம்பரியம் எப்போதும் யூஎன்.பியை அண்டிப் பிழைத்த ஒரு பாரம்பரியம் என்பதை அதன் பாராளு மன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி நமக்கு நினைவூட்டத் தவறுவது இல்லை. விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று சொல்லுகிற அவரிடம் ஏன் தனது கட்சியை கலைக்க மாட்டார் என்ற கேள்விக்கு மறுமொழி இல்லை. இந்தப் பசப்பெல்லாம் மறுபடி ஒரு பாராளுமன்ற ஆசனத்தைப் பிடிக்கும் நோக்கில் மட்டுமே. உண்மையான நோக்கம் யூ.என்.பியின் தயவில் சலுகைகள் பெறுவது அல்லாமல் வெறெதுவும் இல்லை.

கூட்டணிக்குள் குத்துவெட்டுக்களுக்கு முடிவில்லை. தமிழ் அரசியல்வாதிகளுள் டக்ளஸ் தேவானத்தவை மிஞ்சக் கூடிய சந்திரிகா ஆதரவாளர் ஒருவர் இருந்தால், அது திருகோணமலையின் முன்னாள் பா.உ. சம்பந்தன் தான். ஆனந்த சங்கரியின் உடலில் யூஎன்.பி. பிரமுகர்களைத் தொட்ட காற்றுத் தீண்டினாலே அவரது அகமும் முகமும் மலரும். ஜோசப் பரராஜசிங்கமே மிகவும் அடங்கிப்போயுள்ளார். நான்கு தமிழ்க் கட்சிகளிடையிலான உடன்பாடு எதற் காக என்ற கேள்விக்கு உண்மை யான பதில் என்ன? போன தடவை எதிர்த்துப் போட்டியிட்டுத் திருகோண மலையில் ஒரு தமிழ் எ.பியும் இல்லாமல் செய்து வரலாறு படைத்திருந்து இவர்கள் எதையாவது படித்திருக்கிறார்களா? நிச்சயமாக இல்லை. தேசியப் பட்டியலில் மேலதிகமாக ஒரு ஆசனத்தைப் பெறும் நோக்கமா? இருக்கலாம், ஆனாலும் அதுவே முக்கிய நோக்கமில்லை. நிச்சய மாக எது இவர்களிடையே மோதலை மட்டுமே கொண்டுவரும். ஒவ்வொரு கட்சித் தலைமைக்கும் ஒரு திட்டம். இருக்கிறவர்கள் உள்ளதைத் தக்க வைக்க. இல்லாதவர்கள் எதையாவது பெற, எனவே நான்கு கட்சிக் கூட்டணி இல்லாமலே உள்ளதைப் பேணமுடியும் என்று நினைக்கிற தமிழ்க் காங்கிரசுக் குத் தன் உதவி மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்றைப் பெறுமோ என்ற கவலை. இது போன்ற சமூக அக்கறைகளாலேயே தமிழர் அரசியல் கடந்த அரை நூற்றாண்டுக்காலமாக வழிநடத்தப்பட்டு வந்திருக்கிறது.

செல்வநாயகம் சமஷ்டி என்றால், பொன்னம்பலம் வட்டமேசை மாநாடு என்பார். அவர்கள் வட்டமேசை மாநாடு என்றால், இவர்கள் மேசையும் வேண்டாம் மாநாடும் வேண்டாம் என்பார்கள். ஒருவர் தமிழ்ப் பல்கலைக் கழகம் திருகோணமலையில் என்றால், மற்றவர் இந்துப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் என்பார். விளைவு, திருகோணமலையை விட்டு மற்ற மாவட்டங்களிலும் பல்கலைக்கழகங்கள் வந்துவிட்டன. இது தான் தமிழ்க் கட்சிகளின் வரலாற்றுப்புகழ்பூத்த ஒற்றுமையின் சாராம்சம். இப்போது இந்த ஒற்றுமைக்காக ஒரு மிரட்டல் தந்திரோ பாயமும் பாவிக்கப்படுகிறது. சங்கிலியன் படை, எல்லாளன் படை என்ற பேர்களில் விநியோகிக்கப்படுகிற எச்சரிக்கைக் கடிதங்களை எல்லாம் சந்தேகத்துடன் நோக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அண்மையில் சங்கிலியன் படையின் பேரில் வந்த ஒரு மடல் அரசாங்கச் சார்பான ஒரு குழுவின் கைவண்ணம் என்று தெரியவந்தது. பாராளுமன்றத் தேர்தல் அறிவிப்பு வந்த உடனேயே எல்லாளன் படையின் ஒரு ஆணையும் சில நாட்களில் அதற்கு முரணாக எல்லாளன் படையின் இன்னொரு ஆணையும் வந்துள்ளன. விடுதலைப் புலிகளோ வாயையே திறப்பதாக இல்லை.

விடுதலைப் புலிகளுக்கும் தங்களுக்கும் உறவு இருப்பதாகத் தமிழ் மக்களுக்கும், எதுவும் இல்லை என்று சிங்களக் கட்சிகட்கும் காட்டிக் கொண்டு நாலு தமிழ்க் கட்சிகளும் நாடகம் ஆடுகின்றன. கேள்வி என்னவென்றால், இதுவரை காலமும் இவர்கள் வசமிருந்த பாராளு மன்ற நாற்காலி வலிமையைக் கொண்டு இவர்கள் செய்ததெல்லாம் என்ன?

ஒவ்வொரு தமிழ்க் கட்சியினது வரலாறும் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்த கறை படிந்த கைகளின் வரலாறுதான். இந்திய அரசாங்கத்தின் தயவில் அரசியல் பிழைப்பு நடத்தி இன்னமும் அதே போக்கில் தொடருகிற கட்சிகள் எதுவுமே





நன்றி தினக்குரல்



### இதுவே உண்மையான கூட்டு?

கடந்த சில ஆண்டுகளாக இந்திய அரசாங்கத்துக்கும் சிங்களப் பேரின வாதத்துக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கத் தைக் கண்டிக்க ஏன் தயங்கி வந்து ள்ளன? பொதுசன முன்னணி ஆட்சி கவிழும் வாய்ப்பு நெருங்கிய பின்னரே படிப்படியாகச் சில தமிழ்க் கட்சிகளுக்குத் தென்னிலங்கையில் சனநாயகம் பற்றிய அக்கறை வந்துள்ளது. 1987-90 கால இடைவெளியில் நடந்த அரச வன்முறை பற்றி வாயே திறக்காத இந்தத் தலைவர்கள் யூஎன்.பியின் அரசியல் நன்மைக்காக இப்போது சனநாயகக் காவலர்களாக மாறியது எப்படி?

பாராளுமன்றத்தில் இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அத்தனை ஆசனங்களும் கிடைத்தாலும் அதைக் கொண்டு இவர்கள் செய்யப் போவது என்ன? யூ.என்.பிக்கு முண்டு கொடுப்பதா? யூ.என்.பிக்கு அது தேவையில்லாவிட்டால் என்ன செய்வார்கள்? தேவை இருந்தும் இவர்கள் போடும் நிபந்தனைகளை ஏற்க மறுத்தால் என்ன, பிரச்சினைகள் பற்றிய நிலைப்பாடென்ன, வேலைத்திட்ட மென்ன என்று இவர்கள் பொய்யாகக் கூட எதையாவது உருப்படியாகச் சொல்லி எத்தனை காலம்! இவர்கள் தமது அரசியல், ஸ்தாபன வேலைத்திட்ட ங்களைத் தமிழ் மக்கள் முன் வைக்க முதல், தங்களது கொள்கைகள் என்னவென்று சொல்லட்டும். உண்மையில் தமிழ்க் கட்சிகளிடையே ஒருவிதமான கொள்கை வேறுபாடும் இல்லை. ஏனென்றால் இக் கட்சிகளிடம் கொள்கையோ அரசியல் நோக்கோ கூட இல்லை.

இவர்களை இப்போதைக்கு ஒற்றுமைப் படுத்திக் கட்டிமேய்ப்பதில் யூஎன்.பி. தலைமைக்குச் சிறிது நன்மையுண்டு கொழும்பில் தமிழ் வாக்குக்களைச் சிதறாமல் யூஎன்.பி. பெற்றுக்கொள்ள அது வழி செய்யும் அல்லவா.

குமார் பொன்னம்பலத்தின் பேரைச் சொல்லிப் பிழைப்புநடத்தும் தமிழ்க் காங்கிரஸிடம் ஒரு சவால் குமார் பொன்னம்பலம் 1994ல் செய்ய முயன்றது போல, கொழும்பில், யூ.என்.பிக்கும் பொதுசன முன்னணிக்கும் தமிழ் மக்களின் உரிமைகட்காகக் குரல் கொடுக்கும் ஒரு அணியையோ அதன் வேட்பாளர்களையோ பகிரங்கமாக ஆதரிப்பார்களா?

நேர்மையான இடதுசாரிகளுடன் ஒத்துழைப்பு என்று சடைகாட்டி ஒத்து ழைக்கும் வாய்ப்பு வருகிற போதெல்லாம் நழுவுவது தான் தமிழ்க் கட்சிகளது நடைமுறையாக இருந்து வந்துள்ளது.

இதுவரை தமிழ் மக்களுக்காகத் துணிந்து கொழும்பிலும் மலையகத்திலும் வடக்குக் கிழக்கிலும் போராட்டக்குரல் எழுப்பிய உண்மையான தமிழ் இடதுசாரிகளைக் கண்டு இவர்கள் அஞ்சுவது ஏன்? இவர்களுடைய வேஷம் கலைந்துவிடும் என்பதாலா?

தமிழ் மக்கள் இவர்களுக்கு ஒரு பாடங் கற்பிக்க இது ஒரு நல்ல தருணம். இதைத் தமிழ் மக்கள் தவறவிட மாட்டார்கள் என் நம்புகிறேன்.

- மோகன் -

# ஆறுமுகன் – சந்திரசேகரம் கூட்டின் மர்மம்

ஒரு எஜமானுக்கு சேவகம் செய்யும் போது சேவையாளர்கள் விரும்பியோ, விரும்பாமலோ எஜமான் சொற்படி நடக்க வேண்டியிருக்கும் எஜமான் ஐக்கியப்படச் சொன்னால் ஐக்கியப்பட வேண்டும். பிரியசொன்னால் பிரிய வேண்டும் இந்த தேர்தலில் ஆறுமுகனுக்கும், சந்திர சேகரத்திற்கும் ஒரே எஜமான். அவர் தான் ரணில் அவர் சொல்படி நடக்க வேண்டும். அதனால் ஆறுமுகனும், பாதிக்கப்படாதிருக்க ரணிலின் விருப்பப்படி ஒன்று சேர்ந்து விட்டனர் ஐ.தே.கட்சி பட்டியலில்தான் போட்டியிடப் போவதாக தீர்மானித்துவிட்டு ஒன்று படாமல் இருப்பது அவர்களுக்கு பாதிப்பு என்ப தால் ஒன்று சேர்ந்துள்ளனர். ஆனால் மலையக அமைப்புகளை ஒன்று சேர்ந்து பொதுப்பட்டியலில் போட்டியிடப் போவதாக சும்மா ஒரு கதை விட்டிருக் கின்றார்கள் அந்த கதையை நம்பி மலையகத்தின் சில படித்தவர்கள் உணர்ச்சி வசப்பட்டு மலையக அமைப்பு கள் ஒன்றுபட்டு போட்டியிட வேண்டும் என்னும் ஆறுமுகன் சந்திரசேகரன் கூட்டை தாங்கள் வரவேற்பதாகவும் அறிக்கை விட்டுவிட்டார்கள்.

ஆறுமுகன்- சந்திரசேகரன் கூட்டு எத்தகையது என்று அறியாமல் அவசரப் பட்டு அறிக்கை விட்டுவிட்டனர். அவர்கள் மலையக அமைப்புகளை அழைத்து பேசி, பொதுவேலைத் திட்டத்தை முன்னெ டுத்து தேர்தலில் போட்டியிடப் போவதாக அந்த படித்த வர்கள் நம்பிவிட்டனர். ஆனால் பதுளை மாவட்டத்தில் ஐ.தே.க. பட்டியலில் சென்னனுக்கு இடம் கொடுக்க கூடாதென்று ஆறுமுகன் ரணிலிடம் கூறியதாக அறிய முடிகிறது. அங்கு ஆறுமுகத்தின் ஐக்கியத்தின் தேவை எத்தகையது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

எப்படியும் பாராளுமன்றத்திற்கு சென்று விடவேண்டும். மீண்டும் அமைச்சர் பதவிகள் பிரதியமைச்சர் பதவிகளை பெற்றுவிட வேண்டும் என்ற அடிப்படை யிலேயே ஆறுமுகனும் சந்திரசேகரமும் ஐ.தே.கட்சியுடன் கூட்டு வைத்துள்ளனர். ஐ.தே.கட்சி பட்டியலில் தங்களுக்கு இடங்களை பெற்றுக்கொள்வதற்காகவே மலையக அபைப்புகளை ஐக்கியப்படுத்தி பொதுப்பட்டியலில் போட்டியிடப் போவதாக தெரிவித்து வந்தனர். அதை துருப்பாக பாவித்து ஐ.தே.கட்சியுடன் பேரம்பேசி யுள்ளனர். சுகமான வெற்றிகள், கஸ்ட மில்லாத உயர்வுகள், ஆடம்பர வாழ்க்கை என்பன அவர்களின் அரசியலிலிருந்து

## மலையக மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

பிரித்து எடுக்கப்பட முடியாதவை ஆகும்.

அடக்கப்படுகின்ற தேசிய இனம் என்ற அடிப்படையில் அம்மக்களின் மத்தியில் வேலை செய்யும் அனைத்து அமைப்பு களும் அழைக்கப்பட்டு, சுதந்திரமான, ஜனநாயக பூர்வமான கலந்துரையாடல் கள் நடத்தப்பட்டு, பொதுவேலைத்திட்டம் அமைக்கப்பட்ட பின்பே பொதுக்கூட்டணி அமைக்கப்பட முடியும். அத்துடன் பேரினவாத கட்சிகளுடன் எச்சந்தர்ப் பத்திலும் கூட்டுச்சேராது அவர்களிடம் போராடி மலையகத்தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பது பொதுவேலைத் திட்டத்தின் அடிநாதமாக இருக்க வேண்டும். இதுவே மலையக அமைப்புகளின் கூட்டணி ஏற்படுவதற்கான ஆகக் குறைந்த அடிப்படைகளாகும் இவ்வாறு அமையாத கூட்டணி எதுவும் மலையகத் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொள்வதாக இராது.

மலையக கூட்டணிகளின் லட்சனங் களை நாம் ஏற்கனவே தெரிந்து வைத் திருக்கிறோம். இந்தியவம்சாவளி மக்கள் பேரணி என்ற கூட்டணிக்கு என்ன நடந்தது என்பதை அறிவோம். 1998 மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவ தற்காக அக்கூட்டணி உருவாக்கப் பட்டது. தேர்தல் முடிவுகள் முழுமையாக அறிவித்து முடிவடைவதற்குள் கூட்டணி கலைந்தது. அதில் பயன் அடைந்தவர்கள் இ.தொ.கா. சிலர்தான். கொழும்பில் மனோ கணேசன் பயனடைந்தார். ஏனையோர் அரசியலில் இருந்து சில இடங்களையும் இழந்தனர்.

சம்பள உயர்வு கேட்டு இ.தொ.கா. சத்தியாகிரகம் செய்தபோது இன்னொரு ஐக்கயத்தைப் பார்த்தோம். ஐக்கியப்பட்டு தொழிலாளர்கள் போராடினர். இ.தொ.கா. தலைமை அப்போராட்டத்தை காட்டிக்கொடுத்தது. ஆனால் எல்லா தலைவர்களும் சத்தியாகிரகப் போராட்ட த்தினால் வெற்றி கிடைத்ததாகவும் தெரிவித்தனர். தொழிற்சங்க தலைவர்கள் கூட்டாக செய்த சதியில் தொழிலாள்கள் ஏமாந்தனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாடி லான மலையக தேசிய கூட்டணி பற்றி அதிகம் பேசப்பட்டது. அது சத்தியாக்கிரக கூட்டணியினால் அடிப்பட்டுபோனது.

அடக்கப்பட்ட ஒரு இனத்திற்கு ஆகக் கூடுதலான பாராளுமன்ற பிரதிநிதித் துவத்தாலும். இவ் ஆட்சியில் பங்கெடுப்ப தாலும் தான் பாதுகாப்பு கிடைக்கும் என்பதெல்லாம் அடிமைத் தனமாக சிந்தனைகள் அவையெல்லாம் அரசாங் கங்களின் பிற்போக்கு, பேரினவாத நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு சாதகமாக அமையுமன்றி விடுதலைக்கு வழிவகுக்காது. அவை அற்பசொற்ப சலுகைகளுக்காக முழு சமூகத்தையும் அடிமையாக்கின்ற வழிவகைகளாகும்.

இந்த அமைப்பிற்குள் சமரசம் செய்து கொண்டு அடிமையாக வாழ்வதை விட எதிர்ப்பை வெளிப்படுத்தி அழுத்தங்களை கொடுப்பதன் மூலம் ஆகக்குறைந்த பட்ச உரிமைகளையாவது வென்றெடுக்க முடியும் என்பது அனுபவங்கள் நமக்கு கற்றுத் தந்திருக்கும் பாடங்கள் நாட்டின் வளங்கள் மக்களுக்கு பங்கிட்டு அளிக்கப் படுவதை பாராளுமன்ற ஆசனங்க ளாலும், அமைச்சர் பதவிகளாலும் உறுதி செய்ய முடியாதுபோய் விடுகின்றன. என்பதும் எமது அனுபவம். பாராளுமன்ற ஆசனங்களினூடாக கூட போராடி அழுத்தங்களை கொடுக்க வேண்டிய அவசிய மேற்படுகின்றது.

மலையகத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கணிசமான எண்ணி க்கையினர் இருந்தபோதும் அவர்கள் சார்ந்த பேரினவாத கட்சிகளின் கட்டுப் பாட்டிற்குள்ளேயே பாராளுமன்றத்தினுள் செயற்பட முடிந்தது.

எனவே ஆறுமுகன் - சந்திரசேகரன் ஆகியோரின் ஐ.தே.கட்சியுடன் இணை வதற்கான மலையக கூட்டணியால் எதனையும் சாதிக்க முடியாது நேற்று முன்தினம் வரை பிறப்பால் ஐ.தே.கட்சி உறுப்பினர் என்று தன்னைதானே கூறிக்கொண்டிருந்த புத்திரசிகாமணி போன்றோர் அவர்களின் சொந்த நலனுக் காக பொதுஜனஐக்கிய முன்னணியில் போட்டியிட்டால் மட்டும் மலையகத்தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை.

அடக்கப்படும் மலையக தேசிய இனத்தின் அரசியல் பேரின்வாதம் இருக்கும் வரை போராட்ட அரசிய லாகவே இருக்க முடியும். தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் முதலாளித் துவம் இருக்கும் வரை போராட்ட அரசியலாகவே இருக்கும் அழுத்தங் களை கொடுக்கக் கூடிய அரசியலாக இருக்க முடியுமேயன்றி நிச்சயமாக சமரச அரசியலாக இருக்க முடியாது.

ஆகவே வெறும் கூட்டுக்கள் என்பதால் கண்மூடித்தனமாக வாக்களிக்க முடியாது. இரண்டு பேரினவாத முதலாளித்துவ கட்சிகளிடமும் சோரம் போகாத, சுதந்திரமாக மலையக மக்களின் உரிமைக்குரலாக இருக்கக் கூடியவர்களுக்கே மலையகத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் புதிய ஜனநாயக கட்சித் தோழர்கள் மத்திய குழு உறுப்பினர் தோழர் எஸ். பன்னீனர் செல்வம் தலைமையில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மணிக்கூட்டு சின்னத்தில் போட்டியி டுகின்றனர் அவர்களுக்கு வாக்களித்து, வெற்றிபெறச்செய்து அவர்களின் உரிமைப் போராட்டக்குரலை பலப்படுத்து வதே சரியான முடிவாக இருக்க முடியும்.

# விக்கிரமபாகு பேச்சில் புரட்சிவாதி
# செயலில் பதவிக்காக குத்துக்கரணம்!

பேராசை பெருநட்டம் என்பார்கள். கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தினா வின் பதவி ஆசை அவரை எப்படி யெல்லாம் ஆட்டி வைத்திருக்கிறது என்று பாருங்கள்.

நவசமசமாஜக்கட்சி உருவாக்கப்பட்ட காலத்தில் தோழர் வாசு தேவ நாணயக் காரா மட்டுமே பாராளுமன்ற உறுப்பின ராக இருந்தார். 1977ல் யூஎன்.பி. வெற்றி அலை அடித்து முழுப் பாராளுமன்ற இடதுசாரிகளையும் அவர்களது தொகு திகளில் படுமோசமான தோல்விக்கு உள்ளாக்கியது. ஜே.ஆர்.ஜயவர்தன வின் பூரண அடக்குமுறை ஆட்சிக்கு அச்சாரம், புதிய அரசியல் யாப்பு என்ற வடிவில் நிறைவேற்று அதிகாரங்கொண்ட சனாதிபதி யாக அவரை நியமித்தபோது இடப்பட்டது. அடுத்து என்ன வரும் என்பது பற்றி மார்க்சிச லெனினிசவாதி கட்குத் தெளிவு இருந்தது. ஆனாலும் சமசமாஜக்கட்சியும் திரிபுவாதக் கம்யூனிஸ்ட் கட்சியும் இலக்கு வைத்து ஜே.வி.பியால் தாக்கப்பட்ட பின்பே யூஎன்.பி - ஜே.வி.பி. கூட்டு முயற்சி பற்றிய சந்தேகம் மற்றவர்கட்கு வந்தது. ஏனென்றால், ஜே.ஆர்.ஜணவர்தனவால் விடுதலை செய்யப்பட்ட றோகண விஜேவீர பாலா தம்பு என்ற ட்டொஸ்கி வாதியால் ஞானஸ்னாம் செய்யப்பட்டன 1978ல் ட்டொட்ஸ்கிச "நான்காம் அகிலம்" ஒன்றால் ஆசீர்வதிக்கப்பட்டது.

இந்த நிலையில், யூஎன்.பியின் பிரதான இலக்கு 1977 தேர்தல் தோல்வியில் துவண்டு சோர்ந்த ஸ்ரீ.ல.சு. கட்சியாகவே இருந்தது. பண்டாரநாயக்க குடும்பச் செல்வாக்கில் தங்கியிருந்த இக்கட்சியை முறியடிக்கும் நோக்குடன் சிறிமாவோ பண்டார நாயக்கவின் அரசியல் உரிமைப் பறிப்புக்கான நடவடிக் கைகள் துரிதப்பட்டன. இதை மையமாக வைத்து யூஎன்.பி. எதிர்ப்புச் சக்திகள் ஒரு பொது அணியிற் திரளும் வாய்ப்பு இருந்தது. ஆயினும் கலாநிதி கருணா ரத்தினவின் தனிநபர் வீரப் பிரதாப அரசியல் பராக்கிரமத்தைக் காட்டும் தேவையால் ஒரு அரசாங்க பொது வேலை நிறுத்தம் பிரகடனம் செய்யப் பட்டது. இதைச் சில மாதங்கள் பின் போட்டால் தனது பிரபல்யத்துக்குப் பங்கம் வருமோ என்ற அஞ்சியே கலாநிதி கருணாரத்தின இவ்வேலை நிறுத்தத்தை முன்னெடுப்பதில் அவசரம் காட்டி னார் வினைவு? வேலை நிறுத்தம் தோற்ற தோடு அரசாங்கம் தனது அடக்குமுறை வலிமையைக் காட்டிப் பிற எதிர்ப்பு அலைகளும் எழாமல் மறித்து விட்டது.

1982ல் இடதுசாரி கட்சிகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையிலான உடன்பாடு ஏற்படும் வாய்ப்பு இருந்தது என்றாலும் த.வி.கூட்டணி ஜே.ஆர்.ஜய வர்தன - ஏ.ஜே.வில்சன் சாணக்கியத் திற்கு இரையாகி ஏமாந்தது. 1982 இறுதியில் நடந்த சனாதிபதித் தேர்தலின் போது கூட யூ.என்.பிக்கு எதிரான ஐக்கியம் பற்றி நவசமசமாஜக்கட்சி உட்பட்ட பாராளுமன்ற இடதுசாரிகள் சரியாக உணரவில்லை. குறிப்பாகக் கலாநிதி கருணாரத்தினா ஐக்கிய முன்னணி என்பது, அவருடைய மேம் பாட்டுக்காக மற்றவர்கள் பாடுபடுவது என்றே விளங்கி கொண்டுள்ளார். இதன ாலேயே அவருடன் பிற இடதுசாரிகளின் ஐக்கியம் எதுவுமே நிலைக்கவில்லை.

அவரது அரசியல் இலக்கு 1980களில் பாராளுமன்றப் பதவிபெறுவது மட்டுமே என்றாகிவிட்டது. எதைச் சொல்லியாவது தேர்தலில் வெல்ல வேண்டும் என்ற நப்பாசையால் 1988ல் நடந்த தேர்தலில் போட்டியிட்ட போது தனது நிலமானிய உறவுகளை பற்றியும் யூஎன்.பியின் படு பிற்போக்கான முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல உட்பட்டு தனது பட்டங்கள் படிப்புத் தகுதிகள் பற்றியும் மனைவியின் மேட்டுக்குடிச் சொந்தம் உறவுகளின் விவரங்களில் அவரை ஒரு கேலிப்பொருளாக்கியது. என்றாலும் சந்தர்ப்பவாத பாராளுமன்ற இடதுசாரித் தலைமை களது பலவீனம் ஜே.வி.பியை ஏற்காதவர்களிடையே இவருக்குச் சிறிது செல்வாக்கை அளித்தது.

1994ல் பொதுசன முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் நின்றதற் காக வாசுதேவ நாணயக்காராவை நவசமச மாஜக் கட்சியிலிருந்து விலக்கிய கலாநிதி கருணாரத்தினா அதே பொது சன முன்னணி இன்று மிகவும் சீரழிந்து யூஎன்.பியின் கொள்கை களையே பூரண மாக முன்னெடுக்கிற ஒரு காலத்தில் அதில் ஒரு பங்காளியாகப் படாத பாடு படுகிறார்.

தமிழ் வாக்குக்களைப் பெறுவதற்காக விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் தோரணையிற் பேசி வந்த அதே வேளை இனவாத ஜே.வி.பியுடனும் உறவுகளை வளர்த்துக் கொண்ட கலாநிதி கருணா ரத்தினா. தன்னால் ஜே.வி.பியை இன வாதச் சக்தியிலிருந்து மீட்டெடுக்க முடியு மென்று வாய்வீரம் பேசினார். 1993-95ல் ஒருதடவை ஏமாந்து மீண்டும் 1999ல் ஜே.வி.பியால் அவர் ஏமாற்றப்பட்ட சோக வரலாறு நாடறிந்ததே அவரது பதவி ஆசையை நன்றாக அறிந்த ஜே.வி.பி அவரையும் உள்ளடக்கிய புதிய இடது சாரி முன்னணியைக் குலைப்பதற் காகவே அவருடன் கூட்டணி அமைப்பது பற்றி ஆசை காட்டியது என்பது கூட விளங்காமல் தனது பங்காளிகளுக்கு 'பெப்பே' காட்டிவிட்டுப் போனவருக்குத், தன் கருமம் முடிந்த பிறகு, ஜே.வி.பி. 'உனக்குப் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே" என்று உதறித்தள்ளிய பின்பே ஜே.வி.பி. இனவாதக் கட்சி என்ற உண்மை மறுபடியும் உறைத்தது.

சிறுபான்மைத் தேசிய இனங்களைத் தனது திமிர்த்தனமான நடத்தையால் பகைத்துத் தனிமைப்பட்டுப்போன சந்திரிகாவின் அரசாங்கத்தை ஆதரிப்பதற்கு ஜே.வி.பியை முந்திவிட முயன்ற கலாநிதி கருணாரத்தினாவை சந்திரிகாவின் சந்தர்ப்பவாதம் மீண்டும் ஏமாற்றிவிட்டது. ஒரே நேரத்தில் யூஎன்.பியுடனும் ஜே.வி.பியுடனும் பேரம் பேசக்கூடிய ஒரு முதலாளியக்கட்சிக்குக் கலாநிதி கருணாரத்தின தரக்கூடியதாக என்ன இருக்க முடியும்?

பிற இடதுசாரிக் சக்திகளிடமிருந்து முற்றிலும் தனிமைப்பட்டிருக்கிற கலாநிதி கருணாரத்தினாவை இப்போது யூஎன்.பியின் செல்லப் பிள்ளைகளாகி விட்ட முன்னாள் கூட்டாளிகளான கொழும்பு-7 தமிழ்க் காங்கிரசும் மனோ கணேசனும் கூட நன்றாக அணாப்பி விட்டார்கள். இவர் ஆவலுடன் எதிர் பார்த்த தேசியப் பட்டியல் நியமனத்துக்குக் குறுக்கே தங்கள் எம்.பி. பதவிகளைத் தக்க வைக்கத் தவிக்கும் ஸ்ரீ.ல.சு.க., சமசமாஜக்கட்சி, திரிபுவாதக் கட்சி பிரமுகர்கள் தடையாக நிற்கும் போது அந்தக் கனவும் கலைந்து விட்டது. இப் போது தனித்துப் போட்டியிடப் போவதாகச் சவால் விடுகிறார்.

ஒருவர் கூட்டணி ஒன்றை விட்டு விலகுவ தோ ஒன்றில் இணைய மறுப்பதோ கொள்கை அடிப்படையில் அல்லது வேலைத்திட்ட அடிப்படையில் அல்லது இலக்ககுகளின் அடிப்படையில் என்றால் அது மதிக்கக் கூடியது. தனக்கு இல்லாத ஒரு பதவி வாய்ப்பைத் தர மறுத்த ஒரே காரணத்துக்காக எதிர்த்துப் போட்டி யிடுவது என்ன விதமான அரசியல்?

நாளை இவரை யூஎன்.பி. எம்.பி. ஆக்கும் என்றால் நிச்சயமாக வாலைக் குழைத்துக் கொண்டு இவர் போவார். 'வரப்புயர' என்கிற பாட்டில் வருகிற மாதிரி

*விக்கிரமபாகு உயர திருநாவுக்கரசு உயரும்.*
*திருநாவுக்கரசு உயர லீனஸ் ஜயதிலக உயரும்*
*லீனஸ் ஜயதிகல உயர இன்னொருவார் உயர்வார்*

இப்படி எல்லாரும் ஒருநாள் பதவியும் சமூக மேம்பாடும் எய்துவார் என்ற ஆசையில் மண் விழுந்து விட்டது. பாவம் கலா நிதியார், பாவம் அவரது பரிவாரங்கள்.

எப்படியிருப்பினும் கலாநிதி கருணா ரத்தினாவின் அரசியல் பயணத்திலிருந்து இடதுசாரிகள் கற்க நிறைய உண்டு. பிற அரசியற் கட்சிகளுடனோ கொள்கை, வேலைத்திட்டம், அரசியற் கோரிக்கைகள் போன்ற விடயங்களை முன்வைத்துக் கூட்டுச் சேரலாம். எந்த விதமான பதவிகளையும் பெறும் நோக்கில் ஏற்படுத்தும் கூட்டணிகள் குறுகிய காலத்தில் நன்மை தருவது போலத் தெரிந்தாலும் உண்மையில் அழிவுக்கே வழிவகுக்கும் மறுபுறம் கொள்கைத் தெளிவுடன் அமைகிற கூட்டணிகளில் ஏமாற்றம் நிகழ்ந்தாலும், நெறி பிறழாத ஒரு கட்சி, அதன் மூலம் தன்னை வலிமை யுள்ளதாக்கிக் கொள்ள இயலும். இது உலகின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் காணக்கூடிய ஒரு அரசியல் வரலாற்று உண்மை.

**டேவிட் விஜய்**

## இவரா தமிழ்ப்பிரதிநிதி?

- தகப்பன் வழியில்..... அந்த தொழிலாளர் காங்கிரசை முன்னெடுக்கப் போவதாக கூறினார். கொழும்பிலுள்ள சில வியாபாரிகளுக்கு....... தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் விருப்பமில்லாதபடியால்...... மக்கள் முன்னணி என்பதை அமைத்தார்.
- இ.தொ.காவுடன் கூட்டுசேர்ந்து 1998 மாகாணசபை தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் இந்திய வம்சாவளி மக்கள் பேரணியின் பட்டியலில் போட்டியிட்டார். இரண்டு பேரினவாத கட்சிகளும் வேண்டவே வேண்டாம் என்றார். வெற்றி பெற்றார். மறுநாளே இ.தொ.கா வுடன் உறவை முறித்துக்கொண் டார். மயில் சின்னத்தை கொடுத்து உதவிய தொழிலாளர் சங்கத்துடனும் பகைத்துக் கொண்டார்.
- புதிய இடதுசாரி முன்னணியை சீரழித்த விக்கிரம பாகு வீதிகளில் பிக்கட் செய்தபோது அவருக்கு சிறிதுகாலம் முட்டுக்கொடுத்தார்.
- பிக்கட் போராட்டங்களை நடத்தப் போவதாகவும் பின்னர் அவை ஒத்திவைக்கப்பட்டதாகவும் அதிகக் கூடிய அறிக்கைகளை விட்டு சாதனை படைத்தவர்.
- முன்பு பேரினவாத கட்சிகள் வேண்டவே வேண்டாம் என்றவர் 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பேரினவாத கட்சிகளில் ஒன்றான ஐ.தே.கட்சியின் பட்டியலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டார். கொழும்பு மாவட்ட தமிழ் பிரதிநிதி தானாகவே இருக்க வேண்டும் என்பதையும், பேரினவாத ஐ.தே.கட்சி யுடன் கூட்டுச்சேர்ந்தாலேயே தமிழ்ப் பிரதி நிதித்துவத்தை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதையும் வலியுறுத்தி வந்தவர். 2001ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சியின் பட்டியலில் அவருக்கு இடம் தரப்பட மாட்டாது என்று தெரியவந்தப் பிறகு செய்வது அறியாதவரானார்.
- கொழும்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி பட்டியலில் போட்டியிடுவதாயின் தேசிய பட்டிய லின் மூலம் தனக்கு பாராளுமன்ற ஆசனம் ஒதுக்கி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.
- பேரினவாத ஐ.தே.கட்சி பட்டியலில் தனக்கு இடம் கிடைக்காததற்கு இ.தெ.கா. தலைமையே காரணம் என்று அவர் கூறினார். அதே வேளை அவர் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் நெருக்கமானவ ராக மாற முயற்சித்தார் என்று ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.
- கொழும்பு செட்டியார் தெரு கடை ஊழியர்கள் வாரம் ஒருநாள் விடுமுறை கேட்டு போராட்டம் செய்தபோது வாயே திறக்காத பெருவியாபாரிகளின் தோழன்.
- இறுதியாக 12ஆயிரம் கையெழுத்து க்களை சமர்ப்பித்து ஐ.தே.கட்சியின் பட்டியலில் இடம் எடுத்துவிட்டார்.

# புதிய பூமி

புதிய பூமி

Puthiya Poomi REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

சுற்று 08 நவம்பர்/டிசம்பர் 2001 பக்கம் 04 விலை 10/= சுழற்சி 43

S. 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844


## கைவிலங்குகள் உடைத்தெறியப்படுமா?

எதிர்வரும் பொதுத்தேர்தலில் இலங்கையின் வாக்காளர்கள் அவர்களால் அவர்களின் கைகளுக்கு இட்டிருக்கும் மனோரீதியான விலங்குகளை உடைத்தெறிவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? பொதுஜனஐக்கிய முன்னணியும் ஐ.தே.கவும் ஏகாதிபத்திய சார்பான முதலாளித்துவ பேரினவாத கட்சிகள் என்பதை மக்கள் அறிவார்கள். அவற்றின் ஆட்சிக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் விரோத நடவடிக்கைகளையும் மக்கள் அறிவார்கள். அந்தக் கட்சிகளின் அடிவருடிகளாக இயங்குகின்ற தமிழ் முஸ்லீம், மலையக தலைவர்கள் எனப்படுபவர்களால் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை உறுதி செய்ய முடியாது என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

முதலாளித்துவ நாட்டு தேர்தல்களில் பலாத்காரம், மோசடிகள், பிறழ்வான பிரசார நடவடிக்கைகள் என்பனவைக்குட்பட்டவைகளாகவே இருக்கின்றன. இவற்றுக்கு அப்பால் மக்கள் தங்களது அரசியல் ரீதியான அதிருப்திகளையும், எதிர்ப்புகளையும் காட்டும் வகையில் வாக்களிக்க முடியும் என்பதை மக்கள் அறிவார்கள். அப்படி செய்வதன் மூலம் ஒரேயடியாக எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட முடியாது. எதிர்ப்புகளை வெளிப்படுத்துவதன் மூலமே புதிய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் அந்த மாற்றத்தை அடைவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். பல தியாகங்களை செய்ய வேண்டி இருக்கும் அவற்றில் எவ்வித நட்டமும் இல்லாத நடவடிக்கைகளில் ஒன்று தான் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் வாக்களிப்பதாகும்.

அரசியலில் மக்களின் இரட்சகர்கள் என்று எவரும் இருக்க முடியாது. அப்படி சொல்வது வெறும் பொய்யும், புரட்டுமாகும். மக்கள் அரசியலில் நேரடியாக பங்கெடுக்க வேண்டும் சடுதியாக, உடனடியாக, ரேடிமேட்டாக மாற்றமெதுவும் ஏற்படாது என்பதால் மக்கள் விரோத பேரினவாத கட்சிகளுக்கு வாக்களித்து, வாக்களித்து விரக்தியில் ஆழ்ந்த சளிப்படைந்து ஜீவிக்க வேண்டுமா?

தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பேரினவாத யுத்தத்தை ஐ.தே.கட்சியோ, பொதுஜன ஐக்கிய முன்னணியோ நிறுத்தப்போவதில்லை சகல இனங்களுடைய சுயநிர்ணயம் - சுயாட்சி - சமத்துவம் என்பவற்றை உறுதிசெய்யும் அரசியல் தீர்வுக்கு வழிவிட்டுக் கொடுக்கப்போவதுமில்லை. வடக்கு கிழக்கிலும் வடக்கு கிழக்கிற்கு வெளியிலும் தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சோதனைகள் என்றபேரில் பாதுகாப்பு படையினரின் கெடுபிடிகளுக்கு ஆளாகியுள்ளனர். ஏதேச்சாதிகார, பாரபட்சமான கைதுகளும், தடுத்துவைப்புகளும் தொடர்கின்றன. பல்லாயிரக்கணக்கான பெண்கள் யுத்தத்தினால் கணவன்களை இழந்துள்ளனர். லட்சத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர். பாதுகாப்பு படையினரால் தமிழ்ப் பெண்கள் நாளாந்தம் பாலியல் வன் முறைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இரண்டு பேரினவாத கட்சிகளில் எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இவையெல்லாம் தொடரவே செய்யம் அவற்றுக்கு எதிர்ப்புக்காட்டாமல் தொடர்ந்து சகித்துக் கொள்ள வேண்டுமா?

நாட்டின் பொருளாதாரத்தை சீரழிக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஐ.தே.க. பூரணமாக நடைமுறைக்கு கொண்டுவந்தது. அதனை வெகுவிரைவாக பொதுஜன ஐக்கிய முன்னணி முன்னெடுத்துச் செல்கிறது. இதனால் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையே பெரும் பிரச்சினையாகியுள்ளது. எமது நாட்டின் விவசாயிகள் உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது நாட்டு வர்த்தகத்துறையில் எம் நாட்டவர்களுக்கு இடமில்லாது போய்விட்டது. பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பள உயர்வுகள் வழங்கப்பட வில்லை. ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்களும் போதுமானதாக இல்லை. இலங்கை வெளிநாட்டு உற்பத்திப்பொருட்களின் குப்பை மேடாக்கப் பட்டுள்ளது. உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் உலக வர்த்தக நிறுவனம் என்பவற்றின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டே எமது நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென்ற கொள்கை யையே இரண்டு கட்சிகளும் கொண்டிருக்கின்றன அதனால் எமது நாட்டில் இருந்த இலவசக் கல்வி, இலவச சுகாதரா சேவை படிப்படியாக நடைமுறையில் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பொதுப் போக்குவரத்து வசதி சீர்குலைக்கப்பட்டுள்ளது இவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு வாழ வேண்டுமா?

அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டும், சகித்துக்கொண்டும் வாழ வேண்டிய அவசியமில்லை என்பது மக்களுக்கு தெரிந்த விடயமே. அதற்கு காரணமான ஐ.தே.கட்சியையும் பொதுஜன ஐக்கிய முன்னணியையும் நிராகரிக்க வேண்டும் என்பதும் மக்களுக்கு தெரியும். அக்கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கும் தமிழ், முஸ்லீம், மலையக கட்சித் தலைவர்களையும் நிராகரிக்க வேண்டும் என்பதும் மக்களுக்கு தெரியும் ஏற்கனவே பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருந்த இடதுசாரி கட்சிகள் எனப்பட்டவற்றை மட்டுமன்றி அண்மையில் முட்டுக்கொடுக்கச் சென்ற ஜே.வி.பியின், அவர்களின் சந்தர்ப்பவாத நிலைப்பாட்டையும் மக்கள் அறிவார்கள்.

ஐ.தே.கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி என்பவற்றுடன் அவற்றுடன் ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கும் தமிழ், முஸ்லீம், மலையக கட்சிகளுடன் இடதுசாரி எனப்படும் கட்சிகள், ஜே.வி.பி போன்றவற்றை நிராகரிப்பதற்கு தேர்தலையும் சிறந்த ஒரு சந்தர்ப்பமாக கொள்ள முடியும். அவற்றின் மீதான எதிர்ப்பை பிரகடனப்படுத்தவும், நிராகரிக்கவும் அவற்றிற்கு எதிராக வாக்களிக்க முடியும். யுத்தத்திற்கு எதிரான, இனவாதத்திற்கு எதிரான ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நேர்மையான இடதுசாரிகள், ஜனநாயக சக்திகள் கூட்டிணைந்துள்ள ஜனநாயக இடதுசாரி முன்னணிக்கு வாக்களிக்கலாம். அதனூடாக மாற்று அரசியல் சக்தியொன்றை கட்டி வளர்ப்பதற்கான அடித்தளத்தையாவது இடமுடியும்.


இத்தேர்தலில் ஜனநாயக, இடதுசாரி சக்திகளுக்கு வாக்களிப்பதன் மூலமே ஜனநாயக இடதுசாரி சக்திகளின் பலத்தை அதிகரிக்க முடியும். அதன் பெரும் பான்மையை கட்டிவளர்க்க முடியும் அதனாலேயே ஐ.தே.க. பொ.ஜ.முன்னணியின் மக்கள் விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முடியும்.

இதுவரை நடந்த தேர்தல்களில் எல்லாம் மக்கள் அவர்களின் எதிர்ப்பை பெருமளவில் காட்டாமல் இருந்துவிட்டனர். தங்களுக்கு தாங்களே மனோரீதியான கைவிலங்குகளை போட்டுக்கொண்டிருந்துவிட்டனர். எதிர்வரும் தேர்தலில் மக்கள் அவர்களின் மனோரீதியாக கைவிலங்குகளை உடைத்தெறிந்து விட்டு அவர்களின் எதிர்ப்பை காட்டவதற்காக பெருமளவில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மணிக்கூட்டுச் சின்னத்துக்கு வாக்களிப்பார்களா?

- ஆசிரியர் குழு -

## கொழும்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் வாசுதேவ நாணயக்கார ஜனநாயக இடதுசாரி முன்னணி






# கொழும்பு மக்களின் சிறந்த தெரிவு

கொழும்பு மாவட்டத்தில் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மணிக்கூட்டு சின்னத்தில் புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இளையதம்பி தம்பையாவும், கலாலஷ்மி தேவராஜாவும் போட்டியிடுகின்றனர். எமது கட்சி மக்களின் உரிமைக்காக கடந்த காலத்தில் நாடெங்கும் பல வெகுஜனப் போராட்டங்களில் கலந்து கொண்டுள்ளது. சுயநிர்ணய உரிமை - சமத்துவம் - சுயாட்சி என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை உயர்த்திப்பிடித்து பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளது. இனவாதத்திற்கும், யுத்தத்திற்கும் எதிரான போராட்டங்களில் குறிப்பாக வலிகாமம் காணி சுவிகரிப்பிற்கு எதிரான போராட்டம், பிந்துனுவெவ முகாம் படுகொலைகளுக்கு எதிரான போராட்டம், நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தைக்கு எதிரான இனவாதிகளின் இயக்கத்திற்கு எதிரான போராட்டம் என்பவற்றில் எமது கட்சி தலைமைப்பாத்திரத்தையும், பிரதான பாத்திரத்தையும் வகித்துள்ளது. இப்போராட்டங்களில் சிங்கள மக்களின் பங்களிப்பு கணிசமான அளவு கிடைத்தமைக்கு எமது கட்சியின் அயராத உழைப்பே காரணமாகும்.

தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை நியாயப்படுத்தி சிங்களமக்கள் மத்தியல் தொடர்ச்சியாக பல நடவடிக்கைகளை எமது கட்சி எடுத்துவருகிறது. தமிழ் மலையகத்தமிழ், முஸ்லீம் மக்களின் தேசிய அபிலாஷைகளுக்காகவும் தொடர்ந்தும் குரல் கொடுத்தும் போராடியும் வருகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஐ.தே.கட்சி என்பவற்றின் பேரினவாத கொள்கை நடைமுறையினால் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். மேற்படி இரண்டு பேரினவாத கட்சிகளுடனான உறவு கொடுக்கல் வாங்கல் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்களுக்கு எவ்வித தீர்வையும் தரப்போவதில்லை. சிங்கள மக்களுடன் நேரடியாக உறவையும் கொடுக்கல் வாங்கலை வைத்துக்கொள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்த எமது கட்சி அரும் பாடுபட்டு வருகிறது. அதற்காக சிங்கள மக்கள் மத்தியிலுள்ள நேர்மை யான இடதுசாரி, ஜனநாயக சக்திகளுடன் ஐக்கியப்பட்டு செயற்பட்டு வருகிறது.

இங்கு ஜனநாயக சக்திகள் என்றதும் ஐ.தே.க. பொதுஜன ஐக்கிய முன்னணி என்பதை குறிக்காது என்பதை அறிவீர்கள். இடதுசாரி சக்திகள் என்றதும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் என்பதையும் குறிக்காது. அப்பட்டமாக இனவாதத்தை தூக்கிப் பிடிக்கும் ஜே.வி.பியையும் குறிக்காது. அரசாங்கத்தின் மீது எதிர்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரனையை சமர்ப்பித்த பிறகு அரசாங்கத்தின் செலவிலான 'வாமசாம' இயக்கத்தை முன்னெடுத்த விக்கிரமபாகுவையும் இடதுசாரி என்பது குறிக்காது.

மக்களால் பெரிதும் அங்கீகரிக்கப்பட்ட புதிய இடதுசாரி முன்னணியினை குலைத்தவர் விக்கிரமபாகு தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை தீவிரமாக முன்னெடுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் நெருக்கமாக இருந்து வருகிறார். பல கட்சிகள் இணைந்து கட்டியெழுப்பிய புதிய, இடதுசாரி முன்னணியில் தற்போது விக்கிரமபாகுவின் கட்சிமட்டுமே இருக்கிறது. அவரின் விசுவாசத்திற்குரிய முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியின் பொதுசெயலாளர் முஜ்பர் ரஹ்மான் பொது ஜன ஐக்கிய முன்னணியில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறார். அவர்களுக்கெல்லாம் மாவனல்ல சம்பவம் அவ்வளவு விரைவாக மறந்துவிட்டது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைபற்றி ஓங்கி பேசும் விக்கிரமபாகு பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசிய பட்டியலில் இடம் கிடைக்காதபடியாலேயே தனித்துப் போட்டியிடுகிறார். ஏனைய இடதுசாரி கட்சிகளுடன் ஐக்கியப்பட்டு இத் தேர்தலை எதிர்கொள்ள அவருக்கு விருப்பமில்லை. மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டபிறகு கருஜயசூரிய வுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார். மாகாண சபையின் தலைவராவதற்காக ஐ.தே.கட்சியின் ஆதரவை நாடி நின்றதனாலேயே புதிய இடதுசாரி முன்னணிக்குள் பிளவு ஏற்பட்டது. புதிய இடதுசாரி முன்னணியின் புதிய செயலாளராக புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா தேர்ந்தெடுக்கப்பட்டதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே இத்தேர்தலில் மக்களுக்கு உரிய சிறந்த தெரிவு ஜனநயாக இடதுசாரி முன்னணியில் போட்டியிடும் புதிய ஜனநாயக கட்சியின் தோழர்களாகவே இருக்க முடியும்.

அத்துடன் பின்வரும் பிரதான காரணிகளின் அடிப்படையிலும் நாம் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறோம்.

பாராளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் நேர்மையான ஜனநாயக, இடதுசாரி சக்திகளின் பலம் அதிகரிக்கப்பட வேண்டும். ஜனநாயக இடதுசாரி சக்திகளின் பெரும்பாண்மை பலம் கட்டி வளர்க்கப்பட வேண்டும். 1987ஆம் ஆண்டு மாகாண சபை திட்டம் கொண்டுவரப்பட்டதற்கும் 1996 இல் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டதற்கும் தெற்கில் இடதுசாரி, ஜனநாயக சக்திகளின் பலமாக இருந்தமை முக்கியமான அனுகூலமான காரணமாக இருந்தது. அப்பால் தற்போது இல்லாதபடியால் பேச்சுவார்த்தை, அரசியால் தீர்வு, யுத்த நிறுத்தும் என்பனவெல்லாம் வெறும் கண்துடைப்பாக இருக்கின்றன. மீண்டும் யுத்தம் நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன முன்னெடுக்கப்பட்டு இனப்பிரச்சினைக்கு ஜனநாயகபூர்வமான அரசியல் தீர்வு காணப்படுவதற்கு தெற்கில் ஜனநாயக, இடதுசாரி சக்திகளின் பலம் அதிகரிக்கப்பட வேண்டாம். அப்பலத்தை அதிகரிப்பதற்கு இத்தேர்தலை சந்தர்ப்பமாக கொள்ளவோமாக.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் ஜனநாயக பூர்வமான அரசியல் தீர்வு காணப்படுவதற்கு பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது. பேரினவாதத்திற்கு எதிரான சிங்களமக்களை அணிதிரட்டக் கூடிய கட்சிகளுடனும், இயக்கங்க ளுடன் கைகோர்த்து முன்செல்ல வேண்டியது நேர்மையாக தமிழ் மக்களினதும், முஸ்லீம் மக்களினதும், மலையகத் தமிழ் மக்களினதும் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக போராடும் சகல அமைப்புகளினதும் கடமையாகும். அந்த வகையில் இத்தேர்தலில் தோழர் வாசுதேவ தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணியுடன் புதிய ஜனநாயக கட்சி கூட்டிணைந்து போட்டியிடுகின்றது. பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்த சிங்கள மக்களையும் அணிதிரட்டும் கொழும்பிலிருந்து தொடங்கப்பட வேண்டும்.

சிங்கள, தமிழ், மலையகத்தமிழ், முஸ்லீம் மக்கள் வாழுகின்ற கொழும்பு மாவட்டத்திலிருந்து யுத்தத்திற்கு எதிரான, பேரினவாதத்திற்கு எதிரான, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மேற்படி சகல இனமக்களையும் அணிதிரட்டி ஜனநாயக, இடதுசாரி சக்திகளின வலுவான பரந்துபட்ட இயக்கமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஐ.தே.கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய இரண்டு பேரினவாத கட்சிகளின் மாவட்டமாக கொழும்பு இருக்கும்வரை கொழும்பில் இனப்பார பட்சங்கள், பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு அப்பால் தமிழ், முஸ்லீம், மலையகத்தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழமுடியாது. இனங்களுடைய உரிமையையும் இன ஐக்கியத்தையும் அடிப்படையாக கொண்டுள்ள கட்சிகளின் கோட்டையாக மீண்டும் கொழும்பு மாவட்டம் மாற்றமடைய வேண்டும் அப்போதே கொழும்பு வாழ் தமிழ், மலையகத் தமிழ், முஸ்லீம் மக்கள் சுதந்திரமாக. உரிமையுடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த முடியும்.

புதிய ஜனநாயக கட்சி தொடர்ச்சியாக மக்களின் உரிமைக்கான பல வெகுஜனப்போராட்டங்களை தானே முன்னெடுத்துள்ளது. வெகுஜனப் போராட்டங்களில் பங்கெடுத்துள்ளது. குறிப்பாக இனவாதத்திற்கு எதிராகவும், யுத்தத்திற்கும் எதிராக பல நடவடிக்கைகளையும் இயக்கத்தையும் கொழும்பிலும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலும் முன்னெடுத்திருக்கிறது. அந்நட வடிக்கைகளையும், இயக்கத்தையும் ஒருங்கிணைக்கும் நோக்குடனும். அவற்றில் அணிதிரண்ட சிங்கள, தமிழ், முஸ்லீம் மலையகத்தமிழ் மக்கள், தொழிலாளர்கள் விவசாயிகளையும் ஒருங்கிணைப்பதற்கும் ஒரு சந்தர்ப்பமாக கொண்டு இத்தேர்தலில் புதிய ஜனநாயக கட்சி கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுகிறது.

கொழும்பு மாவட்டத்திலுள்ள றப்பர் தோடட்ங்களில் வசிக்கும் மலையகத் தமிழர்களுக்கும், நகர்புற தோட்டங்கில் வசிப்போருக்கும். நகர்புறங்களிலும் சாதிரீதியாக அடக்கப்படுகின்றவர்களுக்கும், பெண்களுக்கும் உரிய தலைமைத்துவத்தை கட்டி வளர்ப்பதற்காகவும் நாம் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறோம்.

### பேரினவாத காட்சிக......

1ம் பக்க தொடர்ச்சி...

தீர்வு காண்பதற்காக வேண்டும் என்ற பேரியக்கத்தில் இணைப்பதற்கான சக்தி இந்த தமிழ் கூட்டாளிகளுக்கு இருக்கிறதா?

ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற பலத்தை அதிகரிப்பதற்காக தமிழ்மக்களிடையேயான ஐ.தே.கட்சியின் ஏஜண்டுகளாகவே 'தமிழ்க்கட்சி கூட்டு' தமிழ் மக்களிடம் வாக்குப்பிச்சை கேட்கிறது. இந்த தமிழ் கூட்டாளிகளை தமிழ்மக்கள் அம்பலப்படுத்தி தமிழ் மக்களிடமிருந்து தூரத்தே விலக்கி வைக்க வேண்டும்.

மறுபுறம் ஈ.பி.டி.பி பேரினவாத ஐ.தே.கட்சி அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமாக இருந்து தமிழ்மக்கள் மீதான ஐ.தே.கட்சி அடக்குமுறைகளுக்கும் யுத்தத்திற்கும் சம்மதம் கொடுத்ததை அறிவோம் பொது ஜனஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் பங்கெடுத்துக்கொண்டு தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் யுத்தத்திற்கும், அடக்குமுறைகளுக்கும் அங்கீகாரம் அளித்து நியாயப்படுத்தி வந்தது. ஆளும் கட்சி எதுவானாலும் அதனுடன் ஒட்டிக் கொண்டு அடிமைத்தனமான அரசியல் பிழைப்பு நடத்துவதை கொள்கையாகவும் நடைமுறையாகவும் கொண்ட ஈ.பி.டி.பி. விடுதலை உணர்வு மிக்க தமிழ்மக்களையும் பேரினவாத அரசாங்கங்களுக்கு அடிமைகளாக்கும் அநாகரீகமான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதை அறிவோம். பேரினவாத அரசாங்கங்களின் கைக்கூலிகளாக செயற்படுவதை கொள்கையாகவும் நடைமுறையாகவும் கொண்ட ஈ.பி.டி.பியால் தமிழ் மக்கள் மேலும் மேலும் அடக்கப்படும் ஒடுக்கப்படும் கேவலமான நிலையே ஏற்படும்,

மலையக கூட்டு என்றபேரில் மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளை ஐ.தே.கட்சிக்காக சேகரிப்பதற்காக ஆறுமுகனும், சந்திரசேகரமும் ஐக்கியப் பட்டுள்ளனர். ரவூப் ரக்கிம் தலைமையி லான முஸ்லீம் காங்கிரஸ் ஐ.தே.கட்சி யுடன் கூட்டிணையும் மலையக, முஸ்லீம் தலைவர்களுக்கு ஆடம்பரமான வாழ்வு கிடைக்கலாம். சாதாரண முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களின் வாழ்வில் மாற்றமேற்படப் போவதில்லை.

இன்றைய இலங்கை அரசியலில் ஐக்கியம் என்ற பேரிலான பம்மாத்துக்கள் மலிந்துவிட்டன. மக்கள் புதிய அரசியல் பாதையை தேர்ந்தெடுப்பதை தடுப்பதற் காக காலத்திற்கு காலம் பிற்போக்கு வாதிகள் பல கூட்டுக்களை அமைப்பது வழமை. இவற்றையெல்லாம் மீறி சரியான அரசியல்பாதையை மக்கள் தேர்ந் தெடுப்பார்கள் என்பது நிச்சயம்.

எனவே எதிர்வரும் பொதுச்தேர்தலில் சரியான புதிய அரசியல் திசைமார்க்கத்தை காட்டி நிற்கும் நேர்மையான ஜனநாயக இடதுசாரி சக்தி களை ஆதரிப்பதே மக்களுக்குரிய சரியான தெரிவாகும். புதிய அரசியல் திசைமார்க்கத்தை உயர்த்திப் பிடித்துள்ள சக்திகளில் ஒன்றான புதியஜனநாயக கட்சி யாழ்பாணம் நுவரெலியா, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் ஜனநாயக இடதுசாரி முன்னனியுடன் இணைந்து போட்டியிடுகிறது. மாக்சிச் லெனினிச கட்சியான புதியஜனநாயக கட்சி வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் கொழும்பிலும் நீண்ட காலமாக வெகுஜன போரட்ட அரசியலை முன்னெடுத்து வருகிறது.

ஜனநாயக இடதுசாரிமுன்னனியின் மணிக்கூட்டு இனத்திட்கு வாக்களித்து அதில் போட்டியிடுகின்ற புதிய ஜனநாயக் கட்சி வேட்பாளர்களையும் எனைய வேட்பாளர்களையும் வெற்றிபெறச் செய்வோம் அதன் மூலம் பேரினவாத கட்சிகளை எதிர்க்க முடியும் பேரினவாத கட்சிகளின் தமிழ் முஸ்லிம் மலையகத் தமிழ் கூட்டாளிகளை நிராகரிக்க முடியும்

வெளியிடுபவர் : இ. தம்பையா இல. 47. 3ம் மாடி, கொழும்பு சென்றல் சப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூ.கே. பிரின்டஸ் 91A, விவேகானந்தா மேடு, கொழும்பு 13.